# ‘பிரேமா’விற்கு தமிழ் பகுதியை ஆளஉரிமையில்லை


விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 ஆனி 2 துல்ஹஜ் 3 இதழ் 125

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 16-06-1991


[பாரிஸ்]

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தலைமையிலான சிறீலங்கா அரசுக்கு வடக்கு-கிழக்கு பகுதியை ஆட்சிசெய்ய உரிமையில்லையென்று விடுதலைப்புலிகள் பேச்சாளர் திரு. லோறன்ஸ்திலகர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலைச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் பி.பி.ஸி க்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்

(4ம் பக்கம் பார்க்க)

## எட்டு படையினர் பலி

(கொழும்பு)

வவுனியாப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் எட்டுப்

[4ம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலை: தேடப்பட்ட இரு நபர்கள் கைது

(சென்னை)

ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவந்த நளினி, முருகன் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு 11-20 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திலிருந்து

(4ம் பக்கம் பார்க்க]

# விடுதலைப்புலிகள் - இராணுவம் வவுனியாவில் கடும் மோதல்

## பூவரசங்குளத்தில்படையினர் விரட்டியடிப்பு

(வவுனியா)

**வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துச்குமிடையே மீண்டும் கடும் மோதல்கள் ஆரம்பித்துள்ளன. நேற்று முன்தினம் ஆரம்பித்த மோதல்கள் நேற்று மாலைவரை நடைபெற்றன.**

வவுனியாவில் ஊரடங்குச் டர்களின் உதவியுடன் முன் சட்டம் அமுல்படுத்தப்பட்டு னேற முயலும் படையினரை விமானங்கள், ஹெலிகொப் எதிர்த்துப் புலிகள் கடும் தாக்குதலை நடத்திவருகின்றனர்.

செட்டிக்குளத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர், இருவிமானங்கள்,

(4-ம் பக்கம் பார்க்க)

## எமது மண்ணிலிருந்து எதிரியை அகற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்]

''எமது மண்ணிலிருந்து எதிரியை அகற்ற வேண்டுமானால் எல்லோரும் எம்மோடு இணைய வேண்டும் எமது மண்ணிலிருந்து எதிரியை விரட்ட வேண்டும். எமது முழுமையான பிரதேசத்தை மீட்க வேண்டுமானால் எதிரியின் முகாம்களைத் தகர்க்க வேண்டுமானால், அகற்ற வேண்டுமானால் இன்னும் ஆயிரமாயிரம் இளைஞர்கள் எம்மோடு இணைய வேண்டும்.''

இவ்வாறு விடுதலைப்புலிகளின் கொள்கை பரப்பு முன்னெடுப்புப் பொறுப்பாளர்

(4ம் பக்கம் பார்க்க)

## 2.4 பில்லியன் ரூபா தண்டப்பணம் அமெரிக்க நிறுவனத்திற்கு அரசு செலுத்தவேண்டும்

(லண்டன்)

அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு 2.4 பில்லியன் ரூபா தண்டப்பணமாக இலங்கை அரசு செலுத்த வேண்டுமென லண்டனிலுள்ள ‘சர்வதேச நீதிமன்றம்’ தீர்ப்பளித்துள்ளது.

மகாவலி திட்டத்தில் கட்

[4ம் பக்கம் பார்க்க]

## “இராணுவ குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்க வேண்டும்”

[பாரிஸ்)

கொக்கட்டிச்சோலையில் மனிததன்மையற்ற படுகொலைகளைச் செய்த இராணுவத்தினரை அரசு கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

கொக்கட்டிச்சோலை கொலை சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற ''உண்மையின் எண்ணங்கள்'' பகுதியிலே இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## எயர்லங்காவில் வெடி குண்டு ஜப்பானில் பெரும் பரபரப்பு!

(கொழும்பு)

‘எயர் லங்கா’ விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக ‘ஜப்பான் தொலைக்காட்சிநிலையம்’ வெளியிட்ட தகவலையடுத்து ஜப்பான் விமான நிலையம் பெரும் பரபரப்பாகிச் சகல பயணிகளும் வெளியேற்றப்பட்ட சம்பவம் அங்கு இடம்பெற்றது.

ஜப்பானிலிருந்து இலங்கை

[4ம் பக்கம் பார்க்க]

## கொக்கட்டிச்சோலைக்கு செல்லமுடியாதிருக்கும் விசாரணைக் குழுவினர்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினரின்படுகொலை பற்றி நேரடியாக பூர்வீக விசாரணைகளை மேற்கொள்வ

(4ம் பக்கம் பார்க்க)



யாழ். முற்றவெளி மாவீரர் அரங்கில் நேற்று முன்தினம் 8-ம் நாளாக நடைபெற்ற முத்தமிழ்விழாவிற்கு விடுதலை புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் தலைமையுரை நிகழ்த்துவதையும் முத்தமிழ் விழா சிறப்புமலரை விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தினேஷ் பெற்றுக்கொள்வதையும், கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை விழா மலரை செயலாளர் நாயகம் திரு. யோகியிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம். — (படங்கள்: தேவா)

# வரி விளம்பரம்

## தேவை

மணிக்கூடுகள், றேடியோ திருத்தம் செய்ய ஆர்வமுள்ள பெண் உதவியாளர் தேவை. எவோ, யாழ் வீதி, மானிப்பாய். (மருதடி கோவில் அருகாமை) (சி–4864)

சாவல்கட்டு - குமுதினி பாலர் பாடசாலைக்கு அனுபவம்உள்ள ஆசிரியை தேவை. விண்ணப்பிப்பவர்கள் 22-6-91க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். அனுப்பவேண்டிய முகவரி க. வீரசிங்கம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. [சி-4861]

## அம்பாள் திருமண சேவை

Engineers, Accountants ஆகியோருக்கு அழகிய பட்டதாரி, A/L சித்தியடைந்த மணப்பெண்கள் (Brides) தேவை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-4859]

## கர்க்கடகத்தில் நீசச்செவ்வாய் சஞ்சாரம்

யுத்தச் செவ்வாய் வியாழனுடன் கர்க்கடகத்தில் நெருங்கும் போது சனியின் கெட்ட பார்வையால் யுத்தம் யூலை வரை தீவிரமடையும் ஆகஸ்ட் வியாழமாற்றத்தால் தணியும். Prof. சத்தியதாஸன், சித்தன்கேணி. (சி-4853)

## "மீரா" நாவல்கள்

இனவிடுதலையை மையமாக வெளிவந்துள்ளவை. வளவை வளவன் "சங்கரன்" செங்கை ஆழியான் "அக்கினி" சிதம்பர திருச்செந்திநாதன் "முள்முடிமன்னர்கள்" விற்பனையாகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னுகம். திருக்கணிதம், சாவகச்சேரி, பிக்பென்ஸ் [B], கிளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் புத்தகசாலைகளில். (சி-4860)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## மணமகள் தேவை

யாழ். இந்து, ஆசிரியர் (வயது 30) படித்த அழகிய தோஷமற்ற மணமகள் தேவை. சைவ போஷனம் விரும்பத்தக்கது. விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்க: விளம்பர இல. 4851 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் (சி-4851)

யாழ். இந்துப் பெற்ருேர் லண்டனில் வசிக்கும் 32வயது Accountant மகனுக்கு லண்டன் அல்லது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-4863, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-4863)

## C C C

Apprenticeship in Pharmacy வகுப்பு 26-06-91 சனிக்கிழமை தொடக்கம் C. C. C. கிளினிக்கில் நடைபெறவுள்ளது. கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், C. C. C. Clinic, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 1382)

## இராசி பலன்

**16-06-1991**

**ஞாயிற்றுக்கிழமை**

சதுர்த்தி மு.ப. 9-08 வரை, ஆயிலியம் பி. இ. 4-24 வரை, இராகு காலம் மாலை 4-23 வரை, சுபநேரம் காலை 8-53 முதல் 10-23 வரை.

மேடம்: கொடுக்கல் வாங்கல் தகராறு, தொழில்பாதிப்பு குடும்ப அமைதி,

இடபம்: காரிய தாமதம், குடும்ப விரோதம், உடல் உபாதை.

மிதுனம்: விரோத மனப்பான்மை, பயனற்றசெய்கை, வீண்வாதம்.

கடகம்: சுபகாரிய செலவு, பணவரவு, குடும்ப உல்லாசம்.

சிங்கம்: தொழில் லாபம், இனசன வருகை, அதிக முதலீடு.

கன்னி; வசதி வாய்ப்பு, தொழில் பாராட்டு, முக மலர்ச்சி.

துலாம்: வயிற்றில் ரோகம், அதிக பிரயாசம், அதிகாரிகள் பாராட்டு.

விருச்சிகம்: தவறுனபாதை, பொருள்விரயம், குடும்பத்தில் பிரச்சனை.

தனுசு: பெரியோர் பகை, மக்களால் துயரம், தொழில் கஷ்டம்.

மகரம்: எதிர்பாராத உறவு, விருந்துபசாரம், ஆலய வழிபாடு.

கும்பம்: பகைவர் சகாயம், சகோதர விரோதம், மனக் கவலை.

மீனம்: தொழில் முயற்சி, நோய் தணியும், பயணம்.

- ஜோஸ்யர்

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

**யாழ்ப்பாணக் கிளை**

★ பெற்ருேர்களை இழந்தவர்களும்,

★ அங்கக் குறைவானவர்களும்

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து/ஆங்கில மொழி ஆகியன இலவசமாகப் பயில விரும்பின் 30-06-1991க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
14-06-1991. (ஏ-1384)

---

# ENGLISH ASSISTANT TEACHERS

தெரிவுக்கான போட்டிப் பரீட்சை

விசேட துரித பயிற்சி வகுப்புக்கள்

சனி - ஞாயிறு விசேட வகுப்புக்களும் உண்டு.

நேரில் வந்து பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: **18-06-91**

வகுப்புக்கள் ஆரம்பம்: **19-06-91**

**Jatfna Technical Institute,**

STANLEY ROAD, JAFFNA.

(றெயில்வே கடவை அருகாமை - மேல்மாடி)

[ஏ-1385]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கபிரியேற்பிள்ளை விஜயரெட்டிணம்

(பண்டத்தரிப்பு மின்தறி ஆலை
தொழில்நுட்ப உதவியாளர்,
அந்தோனியார் ஆலய ஒழுங்கை, பண்டத்தரிப்பு)

மலர்வு: 22-10-1944 மடிவு: 16-10-1990

மீளாத்துயரில் எம்மைவிட்டு பிரிந்துசென்ற எமது அன்புத்தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்ருேம்.

அன்ஞரது ஆத்மசாந்திக்காக:

17-6-91: பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் மாலை 5–30க்கும்.

18-6-91: பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-30க்கும் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் கவலையுறும்

தாயார், பிள்ளைகள்: வினேஜ், சுகி, சுபோ, அனிட்டா
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

பெரியவிளான்.
இளவாலை. (சி-4805)

---

அறிவித்தல்

புங்குடுதீவு குறிகாட்டுவான்

**மனேன்மணி அம்பாள் ஆலய**

## வருடாந்த திருவிழா

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் (இன்று) | — | 16-6-91 |
| தேர் | — | 24-6-91 |
| தீர்த்தம் | — | 25-6-91 |
| பூங்காவனம் | — | 26-6-91 |

ஆலய பரிபாலனசபை
புங்குடுதீவு.

[சி-4858)

---

உலகம் முழுவதும் வாழும் உறவினர்களின் கடிதங்கள் உரிய முறையில் அவர்களது இடங்களுக்கு சென்றடைய

**யாழ்ப்பாணத்தில்**

DHL WORLDWIDE EXPRESS

எமது புதிய அலுவலக முகவரி

**DHL INTERNATIONAL**
**C/o Cosmos Marketing Services,**

120, K. K. S, Road, Jaffna.

(எ–1383)

---

"பாரெல்லாம் தமிழ் முழங்க ஊரெல்லாம் மணங்கமழும்"

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

முத்தமிழ் விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள் சிறப்புற

# வாழ்த்துகின்ருேம்!

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
— பாரதிதாசன்.

வடபிராந்திய

# முச்சக்கர மோட்டார் வண்டி சேவைச் சங்கம்,

யாழ்ப்பாணம்.

(சி 4862)

★ திக்கெல்லாம் சிகரங்கள்;

★ தெருவெல்லாம் மணவறைகள்

# வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சி; மக்கள் வாழ்நாளில் காணாத காட்சி!

## முத்தமிழ் விழா - ஒரு கண்ணோட்டம்

**கா. யோகநாதன்**

திக்கெல்லாம்சிகரங்கள்; தெருவெல்லாம் மணவறைகள்; மின்னும் விளக்கொளிகள்; மின்சார தீபங்கள்; கண்ணைப் பறிக்கும் காட்சிகள்; காதிற்கினிய கீதங்கள்; அலங்கார வளைவுகள்; அழகு கொஞ்சும் பந்தல்கள்; வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வகையில் யாழ். நகர் எழில் நகரமாக உருமாறியிருந்தது.

### உணர்ச்சி பொங்கும் விழா

முத்தமிழ்விழாவையொட்டி மூலை மூடுக்கெல்லாம் வாழைகள், தோரணங்கள்; வண்ணச் சுவரோவியங்கள். முற்றவெளிச் சரித்திரத்தில் யாழ். நகர் வரலாற்றில் இப்படியொரு விழா இடம்பெறுவது இதுதான் முதல் தடவை.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது கூட இப்படியான ஆர்வம், எழுச்சி, உணர்ச்சி மக்களிடம் இடம்பெற்றிருந்தது.

அன்று வழமையான காலம்; யுத்த நெருக்கடியில்லாத நேரம்; வாகனப் போக்குவரத்து வசதியும், வந்து தங்கிச் செல்ல விடுதிகளும் இருந்த காலம் அது. வீதிகள், வீடுகள் எங்கும் மின்சாரம் இருந்த காலம் அது. வாகன தடைகள், மின்சார தடைகள் எதுவுமே இருக்கவில்லை அப்போது.

ஆனல் இப்போது, வீதியில் வெளிச்சமின்றி இருட்டிலே தட்டுத்தடுமாறி விழாவுக்குச் செல்லவேண்டுமென்ற ஆர்வத்தில் குழந்தைகள், தாய்மார்கள், வயோதிபர்கள், குடும்பம் முழுவதுமே ஆறேழு மைல்கள் நடந்து வந்திருந்தார்கள். வடமராட்சி தென்மராட்சி மற்றும் பகுதிகளில் இருந்து சைக்கிளில் வந்திருந்தார்கள்.

### தமிழுணர்வு

எங்கு பார்த்தாலும் தமிழர் கூட்டம். தாமாக வந்த கூட்டம்; தமிழுணர்வால் வந்த மக்கள்.

தினம் தினம் பலர் வெளிநாடு சென்ற பின்னரும்கூட, இத்தனை மக்கள் வெள்ளம், இந்த மண்ணிலே; தங்கள் சொந்த மண்ணிலே, வாழ்கிருர்கள் என்பதை நினைக்கும் போது நெஞ்சம் பூரிக்கிறது, நம்பிக்கை பிறக்கிறது.

### இடிபாடு மத்தியில்

இடிபாடுகள் மத்தியில் இப்படி ஒரு 'இந்திர விழாவா' என்று மக்கள் வியந்து, சிலை போல் தம்மை மறந்து நிற்கும் காட்சிகள் ஏராளம்; ஏராளம்.

ஷெல்லடியால் சீரழிந்து, செயலிழந்து, பொம்மரினுல் பொடிப்பொடியாகி சகடையினுல் சல்லடையாகி சரிந்து போன யாழ். நகரம், முத்தமிழ் உணர்வால் இன்று நிமிர்ந்து நேராகிவிட்டது.

வீதியெங்கும் தெருமூடித் தோரணங்கள்; பார்த்த இடமெங்கும் காற்றில் பறந்தாடும் கொடிகள். சந்தியெங்கும் சிகரங்கள். அதைப் பார்ப்பதா? இதைப் பார்ப்பதா? என்று நகர வீதியெங்கும் மக்கள் வேக நடையில் ஓடோடிச் சென்று அலங்காரத் தோற்றங்களை பார்த்து ரஸித்த காட்சி மறக்கமுடியாத ஒன்று.

### குதூகலம்

பெற்றேருடன் வந்த சின்னஞ் சிறுசுகள், பன்னிரண்டு மாதங்களாக மின்னொளியை காணாத சிறுவர்கள், மின்சார தீப அலங்காரங்களை கண்வெட்டாமல் பார்த்துக் குதூகலித்தனர்.

இருட்டிலே வாழ்ந்து பழகிப்போன மக்கள், விழா ஒளியைப்பார்க்க ஓடோடி வந்தனர்; உள்ளம் மகிழ்ந்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட ஒலிபெருக்கிகள், தூரத்தில் நின்ற மக்களும், நிகழ்ச்சிகளை கேட்டு ரஸிக்க உதவியது.

யாழ் சத்திரத்து சந்தியில், எழில் கொஞ்சும் அலங்காரச் சிகரம்; அதிலே இடைவெளியின்றி மின்னொளிகள். அங்கிருந்து மாவீரர் அரங்கம்வரை பூப்பந்தல்கள்.

வீதியின் நடுவில் தொண்டர்கள். மக்களுக்கு உதவியாக அணிவகுத்து நின்றனர்.

பழைய தபாலக சந்தியில் புதியமுறை அலங்கார கோபுரங்கள். அங்கிருந்து பார்த்த போது மைதானம் தெரியவில்லை. மக்கள் வெள்ளத்தைத் தான் காணமுடிந்தது.

### 50 அடி உயர அரங்கு

இசை மழை பொழிய முன்னரே மைதானமெங்கும் மக்கள் வெள்ளம் நிரம்பிவிட்டது. ஐம்பதடி உயரமான அழகான அரங்கு; அதில் 15 அடி உயரத்தில் முத்தமிழ் விழா மேடை.

### வெற்றிவிழா

'தேனிசை செல்லப்பா' நிகழ்ச்சி முன்பு நடந்தபோது, அங்குமிங்குமாக மின்னொளி காணப்பட்ட கோட்டையின் உள்பகுதி இன்று வெறிச்சோடி இருள் சூழ்ந்து கிடந்தது. அதனல் இது ஒரு வெற்றி விழாவாகவும் இருந்தது.

மைதான ஒழுங்குமுறை மக்கள் நெரிசலைத் தவிர்த்தது. நடுவிலே மக்கள் நடமாடப் பாதை விட்டு, அங்கெல்லாம் தொண்டர்கள் நின்று மக்களுக்குத் துணைபுரிந்தார்கள்.

எறும்புக் கூட்டம் ஊர்ந்து செல்வதுபோல்; அலங்கார ஊர்திகள் பவனி வருவது போல; மக்கள் ஒருவர் பின் ஒருவராகச் சென்ற காட்சி, மக்களின் கட்டுப்பாட்டை எடுத்துக்காட்டியது.

### தமிழீழ வரைபடம்

பழைய தபாற்கந்தோருக்கு முன்பாக வீதியோரத்தில் 50 அடி உயரமான தமிழீழம் வரைபடம் ஒன்று. அதற்கு முன்னுல் ஒரு கூட்டம். சிறுவர்கள்தான் அதிகம். படத்தைப் பார்த்து, ஒரு சிறுவன் கொக்கட்டிச்சோலை எங்கே? என்று கேட்க; கூட்டி வந்த தந்தை கைவிரலால் சுட்டிக் காட்ட அந்தச் சிறுவன் கூர்மையாக அவ்விடத்தைப் பார்த்தவாறு மற்றும் சிறுவர்களுக்கும் காட்டிக்கொண்டிருந்தான்.

அதற்கு அப்பால் சென்ற போது, ஆண்டொன்றுக்கு மேலாக 'ஐஸ்கிறீம்' சுவைத்து அறியாத சிறுவர்கள் வான் ஒன்றைச் சுற்றிவளைத்திருந்தனர். பேத்தியாரின் 'கொட்டப்பெட்டி'யைப் பிடித்து இழுத்துச் சில்லறை பொறுக்கி வந்த சிறுவர்கள், பேசாமல் பறையாமல் பேரனின் வல்லுவத்தில் கூசாமல் கைவிட்டுக் கிள்ளிய காசுடன் வந்த பிஞ்சுகள், தாவியணைத்துத் தாயின் சேலை முடிச்சில் அவிழ்த்த நாணயக் குற்றிகளுடன் வந்த அந்த மழலைகள் 'ஐஸ்கிறீம்' வானை முற்றுகையிட்ட காட்சி மறக்கமுடியாத ஒன்று.

### மக்கள் தலைகள்

மணிக்கூண்டுக் கோபுரம் முதல் மாநகர மண்டபம் வரை மக்கள் தலைகளைத்தான் காணமுடிந்தது. அப்போது நேரம் இரவு 10-00 மணி. அதன் பின்னரும் அரங்கு நோக்கி மக்கள் அணியணியாகத் திரண்டு வந்துகொண்டிருந்தனர். முத்தமிழ் விழாக் காண மத்தியானமே திட்டமிட்டு, அக்கம்பக்க வீடுகளில் அயலவர்களையும் சேர்த்து நேரகாலத்துடன் இரவுணவை முடித்துவிட்டுக் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருந்தனர். அத்தனை மக்களும் நள்ளிரவு கடந்த பின்னரும் முத்தமிழ்த் தேன்துளிகளைப் பருகிக்கொண்டிருந்தனர். விடியும் வரை நிகழ்ச்சிகள் இருந்தாலும் வீட்டைப் பற்றிச் சிந்திக்காமல் விழித்திருந்து ரசிக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் பலியானவர்களின் நினைவுச் சின்னத்திற்கு அண்மையில் நின்று பார்த்தபோது, மேடையும் அதனைச் சுற்றி மின்னொளியினுல் அலங்கரிக்கப்பட்ட சிகரங்கள், மணவறைகள் மத்தியில் மிதக்கும் மக்கள் வெள்ளமும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

### ஆர்வம், அக்கறை

''இப்படியான ஒரு காட்சியை வாழ்நாளில் பார்ப்பதற்குக் கொடுத்துவைக்கவேண்டும்'' என்று அருகில் நின்ற பெரியவர் ஒருவர் தம்மை அறியாமலே வாயில் முணுமுணுத்தது என் காதில் விழுந்தது.

மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஆர்வத்தோடு பார்த்தனர்; அக்கறையோடு கேட்டனர்.

முதல்நாள் வந்த மக்கள் பலர் மறுநாளு் வந்தனர். 'நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்' என்ற கவியரங்கு நிகழ்ச்சி மக்களைக் கவர்ந்தது. முதல் நாள் மழையினுல் ஏற்பட்ட அனுபவமோ என்னவோ, மைதானத்தில் சிலர் கையில் குடையுடன் வந்திருந்தனர். ஆனுல் மறுநாள் மழையினுல் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை

### மறக்கமுடியாத காட்சி

விடுதலைப் புலிககளின் திறப்புரைகளை மக்கள் அக்கறையுடன் கேட்டனர். நாட்டிய நாடகம் உட்பட மற்றும் நிகழ்ச்சிகளும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன.

விடுதலைப் புலிகள் கலை. பண்பாட்டுக் கழகத்தினர் தமிழுக்குப் பெருவிழா எடுத்தது. வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சி. மக்கள் தம் வாழ்நாளில் காணாத காட்சி.

---

## பொலி தாயே!

பொங்குங் கடலிங்கே பூரித்துநிற்க...
தங்கத் தமிழருன்னைத் தாலாட்ட...
அங்கங்க ளிழந்த அரும்புலிகள்
அமர்ந்து... தமைமறந்து ரசிக்க...
எங்கள் மண்ணில் பத்துநாள்
திங்கள் என வந்தாடி நிற்கும்,
சங்கத் தமிழே! சீரிளமை யோடென்றும்
பொங்கிப் பரிணமித்துப் பொலி தாயே!

ஆடற் கலையின் அற்புதமும் - தேனிசையும்
கூடவே நின்று கொக்கரிக்கும் உரையரங்கும்
தேடற்கரிய வழக்காடு மன்றங்களும்...
நாடகமும் நமக்குணவாய்த் தந்து...
நாடவைத்தா யுன் வழியில்...
ஓடவைத்தாய்; அயல்நாட்டு மோகமதை...
வாடாமல் நின்றிலங்கும் வண் தமிழே
பாடாம லுன்னை நானிருப்பேனே?

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

---

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

## முத்தமிழ் விழா

### 10-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள 'மாவீரர் கலையரங்கம்'

நாள்: 16-06-1991 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 5-30 மணி

மங்கள இசை

நாதஸ்வரம்

திரு. என். கே. பத்மநாதன்
திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி
திரு. வீ. கே. பஞ்சமூர்த்தி

தவில்

திரு. என். ஆர். சின்னராஜா
திரு. ரி. உதயசங்கர்
திரு. என். ஆர். புண்ணியமூர்த்தி
திரு. ஆர். எஸ். சுதாகரன்

விடுதலைப்புலிகளின் திறப்புரை

சிறப்புரை

நாடகம்

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின்
''கொடியரின் கொடுமை''
நாட்டிய நாடகம்

இசைக்கச்சேரி

| | | |
|---|---|---|
| திரு. பொன். சுந்தரலிங்கம் | — | பாட்டு |
| திரு. ஆர். ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| திரு. எஸ். மகேந்திரன் | — | மிருதங்கம் |
| செல்வன் கே. கண்ணதாசன் | — | கடம் |
| செல்வன் கே. துரைராஜா | — | கஞ்சிரா |

நாடகம்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
''உயிர்த்து வந்த மனிதர் கூத்து''

மெல்லிசை நிகழ்வு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின்
''போர்க்காலப் பாடல்கள்''

---

### இயல், இசை, நாடகம் வழங்கும்

# இறுதிநாள் முத்தமிழ் சிறப்பு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழாவின் இறுதி நாளான இன்று நாதஸ்வர மேதைகளான என். கே. பத்மநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி ஆகியோரின் நாதஸ்வர இசையும், திரு. என். ஆர். சின்னராசா, திரு. ரி. உதயசங்கர், திரு. ஆர். எஸ். சுதாகரன் ஆகியோரின் தவில் இசையும் இணைந்து இசை மழை பொழிகிறது.

பெண் போராளிகளாலேயே தயாரிக்கப்பட்டு, நடிக்கப்படும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் 'கொடியோரின் கொடுமை' நாட்டிய நாடகம் இன்றைய முத்தமிழ் விழாவில் அரங்கேறுகின்றது.

தமிழீழத்தின் பிரபல பாடகர் சங்கீதபூஷணம் திரு. பொன். சுந்தரலிங்கம் இன்றைய முத்தமிழ் விழாவில் தமிழிசை பாடுகின்ருர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் வரைக்கும் தனது இசைவளத்தால் மக்களின் மனதைக் கொள்ளைகொண்ட திரு. பொன். சுந்தரலிங்கம் முற்றவெளியில் இசைக்கச்சேரி செய்கின்ருர்.

தமிழீழத்தின் தலைசிறந்த நாடக இயக்குநர் திரு. க. சிதம்பரநாதரின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து வழங்கும் 'உயிர்த்து வந்த மனிதர் கூத்து' என்ற நாடகம் இன்று மேடையேறுகிறது. 50க்கு மேற்பட்ட கலைஞர்களின் கூட்டுத் தயாரிப்பான இந்த நாடகம், ஈழத் தமிழினத்தின் போராட்ட வரலாற்றைச் சித்தரித்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் வெளியீடான 'இந்த மண் எங்களின் சொந்த மண்', 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்', 'பரணி பாடுவோம்' ஆகிய மூன்று ஒலிப்பதிவு நாடாக்களிலுமுள்ள பாடல்களைப் பாடிய சாந்தன், குலசிங்கம், பௌசியன், சியாமளா, குணமலர், ராதிகா, மிதிலா, விவேகானந்தன் ஆகியோர் தாங்கள் பாடிய பாடல்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## 11,000 ரொக்கட் மோட்டர்கள் பறிமுதல்

# இலங்கை அரசுக்கு எதிராக தாய்வான் வழக்கு தாக்கல்

[டாக்கா]

தாய்வானுக்கு இலங்கையூடாக சென்ற எம். வி. மதலிஞ கப்பலை வழிமடக்கி அதிலிருந்த 11ஆயிரம் ரொக்கட் மோட்டர்களை பறிமுதல் செய்ததை ஆட்சேபித்து தாய்வான் அரசு இலங்கைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது.

மேற்படி மோட்டார் ரொக்கட்டுகள் தாய்வான் விமானப் படைக்கு சென்றதாகவும் இலங்கை வந்தபோதே இக்கப்பல் மடக்கி பிடிக்கப்பட்டு இவை பறிமுதல் செய்யப்பட்டதாம்.

தாய்வான் அரசின் பிரதிநிதியாக மேற்படி கப்பல் கம்பனியான 'மக்லேன்' கம்பனியின் பிரதிநிதி கடந்த வாரம் இங்கு வந்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இது தோல்வியடையுமானால்'சர்வதேச நீதிமன்றம்' சென்றும் தாம் வாதாடப் போவதாக இவர் தெரிவித்துள்ளார். [சி]

## நயினையிலிருந்து காரைநகர்

# அழைத்துச் செல்லப்பட்ட நாற்பது பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவிலிருந்து சுமார் 40பொதுமக்கள் நேற்றுமுன்தினம் காரைநகருக்கு படையினரால் கூட்டிச்செல்லப்பட்டனர்.

காலை 7 மணியளவில் இவர்கள் நயினாதீவிலிருந்து 3 படகுகளில் காரைநகர் துறைமுகம் பகுதியில் சென்றிறங்கி அங்கிருந்து ட்ரக் மூலம் ஈழத்து சிதம்பரத்திற்கு கூட்டிச்செல்லப்பட்டபின்னர் மாலை 4 மணிக்கு மீண்டும் நயினாதீவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனராம்.

துறைமுகத்திலிருந்து சிவன் கோவிலுக்கு செல்லும் பாதையில் பலவீடுகள் தகர்க்கப்பட்டநிலையிலும் பல வீடுகள் யன்னல்கள், கதவுகள் உடைக்கப்பட்டு வீட்டுவேலிகள் எரிக்கப்பட்ட நிலையிலுமிருந்ததை தாம் கண்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை காரைநகரில் படையினர் கொள்ளை சம்பவங்களில் ஈடுபடுவதாகவும், வீடுடைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் எவரையும் காரைநகர் பக்கம் வரவேண்டாமென்றும் அங்கிருந்து பலர் எழுதிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. [சி]

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

தர்சன் (லெப். சிறீதரன் சித்தன்கேணி), வரோதயன் (பரணிதரன்துன்னாலைதெற்கு) ஆகிய போராளிகளே இந்த வெடிவிபத்தில் வீரமரணமடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இறுதி நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகததின் மாபெரும் முத்தமிழ் விழா பத்தாம்நாள் இறுதி நிகழ்ச்சிகள் யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு நாதஸ்வர இசையுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. இந் நிகழ்ச்சிகளில் லட்சக்கணக்கான மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (56)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பொன்னாலை, அராலித்துறை பகுதிகளைநோக்கித் தினமும் ஷெல்தாக்குதல் நடத்திவருகின்றார்கள்.

## போக்குவரத்து சபை ஊழியர் சம்பளம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களுக்கான சம்பளம் நாளை திங்கட்கிழமை காசோலையாக வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை. கோண்டாவில், காரைநகர் ஆகிய டிப்போக்களில் கடமையாற்றும் ஊழியர்கள் கோண்டாவில் மத்திய நிலையத்தில் மேற்படி காசோலையைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்பட்டுள்ளது. (த)

## எயர்லங்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிச் செல்லத் தயாராகவிருந்த 'ஏயர் லங்கா' விமானத்தில் சூட்கேஸ் ஒன்றினுள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகத் தொலைக்காட்சி நிலையம் அறிவித்தது.

இதையடுத்து விமான நிலையம் உடனடியாக ஜப்பான் கமாண்டோப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். அஞதரவாக் விமான இருக்கையொன்றின் அருகிலிருந்த இந்தப்பெட்டி நுணுக்கமாக ஆராயப்பட்டபோது அதில் பேனு விளக்குப் - பற்றறிகளே இருந்தனவாம். இதற்குரியவரும் சற்று அப்பால் இருந்தாராம்.

பின்பு பரபரப்புத் தணிந்து 'ஏயர்லங்கா' புறப்பட்டு இலங்கை வந்தது. (சி)

## எட்டு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படையினர் கொல்லப்பட்டதாகவும் பன்னிரண்டு படையினர் படுகாயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 12 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசதரப்புச் செய்திகள் தெரிவித்தன.

சுமார் நான்கு மணிநேரம் இம்மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றதாவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மொதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டன. (க)

## திருமலையில் 14 தமிழர் கைது

[திருமலை]

திருகோணமலை மாவட்டம் கிளிவெட்டி முகாமிலுள்ள இராணுவத்தினர் கடந்த 12-ஆம் திகதி மேன்காமம் கிராமத்தைச் சுற்றிவளைத்து 14 தமிழ் பொதுமக்களைக் கைது செய்தனர்.

கைது செய்த நான்கு பேரையும் கிளிவெட்டி இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர். [பூ]

## திக்கெல்லாம

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன் நேரடியாகப் பாடுகின்றார்கள். ஒலிப்பதிவு நாடாக்களில் இசை வாத்தியக் கருவிகளை இசைத்த கலைஞர்கள் அனைவரும் இந் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர். பாடல்களின் இசையமைப்பாளரான திரு. கண்ணன் இந்தப் போர்க்காலப் பாடல்களின் இசை நிகழ்ச்சியை நெறிப்படுத்துகின்றார்.

## ராஜீவ் கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னைக்குப் பஸ்ஸில் பிரயாணம்செய்துகொண்டிருந்த போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதான நளினி ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட பத்மாவின் மகள் என்றும் பத்மாவுடன் அவரது மகன் பாக்கியநாதனும் ஏற்கனவே கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

# மொழியை பாதுகாக்க ஒன்றிணைந்து போராடுவோம்

[யாழ்ப்பாணம்]

''எமது மொழியைப் பாதுகாக்கவேண்டுமானால் ஆண், பெண் வேறுபாடின்றி ஒரே கொடியின்கீழ் போராட முன்வரவேண்டும்.''

இவ்வாறு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி யாழ். மாவட்ட தலைவி செல்வி ஆர்த்தி முற்றவெளியில் நடைபெற்ற முத்தமிழ் விழா 9ம் நாள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்ஜ உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இமயம்முதல் கடாரம்வரை அன்று சோழவேந்தரின் படையெடுப்பால் புலிக்கொடி பிறந்தது. அதன் நினைவாக இந்திர விழா எடுக்கப்பட்டது. இன்று சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கெதிராக போரிடும் புலிகள் தேசத்தை மீட்க, மொழி, பண்பாட்டை பேணிப்பாதுகாக்க தமிழர் வரலாற்றில் இன்று முத்தமிழுக்கு விழா எடுக்கிறார்கள்.

## எமது மண்ணில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரா முற்றவெளி மைதானத்தில் நேற்றுநடைபெற்ற 9ஆம் நாள் முத்தமிழ்விழா நிகழ்ச்சியில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: எதிரியின் நிகழ்வால், நடவடிக்கையால் உடைந்த, சிதைந்த கட்டிடங்களைப் பார்க்கின்றோம். எதிரி எமது பிரதேசத்தை முற்றும் முழுதாக அழிக்க எண்ணினான்; முடியவில்லை.

ஒரு இனத்தை அழித்து ஒழிக்க வேண்டும் என்று ஒரு அரசு நினைத்தால் முதலில் அந்த இனத்தின் கலை,கலாச்சாரங்களையே அழிப்பார்கள்.

இதே பாணியைத்தான் இலங்கை அரசும், தமிழ் மக்களின் கலை, கலாச்சாரப் பொக்கிஷங்களை முதலில் அழித்து ஒழித்தார்கள். அதற்கு எடுத்துக்காட்டு எமது யாழ். நூல்நிலைய எரிப்பாகும்.

தமிழ்க்கலை, பண்பாட்டை அழிக்க முற்படுபவர்கள், போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள் எல்லாம் நாட்டைவிட்டுச் சென்றுவிட்டார்கள். இங்கு வாழும் மக்கள் இந்த மண்பற்றில் வாழ்கிறார்கள்.

லத்தீன் மொழி அழிந்து ஆங்கிலம் உருவாகியது. சமஸ்கிருதம் அழிந்து ஹிந்தி, உருது மொழிகள் உருவாகின. ஆனால் எமது தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டு சிதைவுறாது, அழகோடு, பண்போடு மிளிர்கிறது.

புறநானூற்றுக் காலந்தொட்டே போராளிகள் இருந்திருக்கிறார்கள். சங்கம் மருவிய காலம் தமிழ் வளர்ச்சி குன்றிய காலமாக இருந்தாலும் பல காவியங்களை உருவாக்கின காலமாகத் தென்படுகிறது.

ஐரோப்பியர் காலத்தில் செய்யுள் வடிவிலிருந்த இலக்கியங்கள் இலக்கிய வடிவங்களாக மாறின. பூததம்பி தொடக்கம் விபுலாநந்தர்வரை அந்தக் காலகட்டத்தில் தமிழ் வளர்த்தார்கள்.

நாம் மூடநம்பிக்கைகள், பழமைவாதம் ஆகியவற்றிலிருந்து விடப்பட்டு, விஞ்ஞான ரீதியாக எமது மொழியை நவீனமயப்படுத்த வேண்டும்.

தலைவர் பிரபாகரன், பிரதித்தலைவர் மாத்தயா ஆகியோர் கலையில், பண்பாட்டில், எமது தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வம்கொண்டவர்கள். அவர்கள் வழியில் இந்த தமிழீழ அறிவு ஜீவிகள் எமது மொழியைவளம்படுத்த ஒன்று சேர்ந்துவிட்டார்கள்'' என்றார். (152-வி)

## கொக்கட்டிச்சோலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கென மட்டுநகர் சென்ற மூவர்கொண்ட குழு சம்பவம் நடந்த இடத்துக்கு செல்ல முடியவில்லை.

இக்குழுவில் இளைப்பாறிய மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டீ. ஜே. ஜயலத், பொலிஸ் அத்தியட்சகர் கே. கமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் சட்ட விவகார உதவிச் செயலாளர் எச்.கே. ஜினதாச ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இக்குழுவினருடன் பிரதமர் டி. பி. விஜேதுங்கவும் சென்றுள்ளார். (பூ)

## விடுதலைப்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு 'ஹெலி. கொப்டர்களின் உதவியுடன்பூவரசம்குளம்சந்தி நோக்கி நேற்று முன்தினம் முன்னேற முயன்றபோது புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே கடும் மோதல் நடைபெற்றது.

நேற்று மாலை வரை இடம் பெற்ற இம்மோதலில் புலிகளின் உக்கிர தாக்குதலையடுத்து இராணுவத்தினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

சின்னதம்பனை என்னும கிராமத்திற்கருகில் இடம் பெற்ற மோதலில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வவுனியாவுக்கு மேற்கே தொடர்ந்து விமானத்தாக்குதல்கள் மத்தியில் சண்டைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. [56-ரி)

## இராணுவ

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சிறிலங்கா இராணுவம் நடத்தும் படுகொலைகள் தமிழர்பிரச்சனைக்காக தொடர்ந்து போராடி வரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவை அதிகரிக்க பயன்படும்.

இத்தகையபடுகொலைகளால் ஆத்திரமடையும் யாரும் அரசை எதிர்க்க நினைப்பது இயல்பானதாகும்.

அப்பாவிப் பொதுமக்கள் மீது படுகொலை நடத்தும் இராணுவ வீரர்களையோ அல்லது படுகொலை நடந்த நேரம் இராணுவத்துக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகளையோ தற்காலிகபதவி நீக்கம் செய்வதன் மூலமோ நீதிவிசாரணை நடத்துவதன் மூலமோ இதுபோன்ற படுகொலைகள் திரும்ப நடவாது என்பதற்கு உத்தரவாதமில்லை.

மனிதத் தன்மையற்ற படுகொலைகளைச் செய்த குற்றவாளிகளை அரசு கடுமையாக தண்டிக்கவேண்டும். (ரி)

## பிரேமாவிற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் கொக்கட்டிச்சோலையில் 185 தமிழ்பொதுமக்கள் ராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதிலிருந்து சிறீலங்கா இராணுவம், ஜனாதிபதி பிரேமதாஸாவின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதும், சிறீலங்கா அரசுக்கு வடக்கு-கிழக்குப் பகுதியை ஆட்சி செய்ய உரிமையில்லையென்பதும் புலப்படுகிறது என்றும் அவர் கூறினார். (பூ)

## 2,4 பில்லியன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிட நிர்மாண துறையில் ஈடுகட்ட 'சார்சி டில்லிங்கம்' என்ற இந்த அமெரிக்க தனியார் நிறுவனம் இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை தங்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை மீறியதாக சர்வதேச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடரப்பட்ட இவ்வழக்கின் விசாரணை கொழும்பிலும், லண்டனிலும் நடைபெற்றபின் லண்டனில் அண்மையில் இலங்கை அரசு தண்டப்பணம் செலுத்தவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81